[2010 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்போது முன்னறிவிப்புக் கொடுத்தீர்கள்? Right-ஆக claim -செய்தீர்களென்றால் வாய்ப்பு தர முடியாது. 9.45 மணிக்கு அறிவிப்புக் கொடுத்துவிட்டு, எப்படி கேட்க முடியும்? (குறுக்கீடுகள்) இரண்டு வார்த்தைகளில் சொல்லி முடியுங்கள், போதும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுமான வரையில் சட்டமன்றத்தில் மிகுந்த நடுநிலையோடு பிரச்சினைகளைத் தாங்கள் முடிவு செய்து கொண்டிருக்கிறீர்கள். குறிப்பாகக் கேள்வி நேரம் ஒத்திவைக்கப்பட வேண்டுமென்றால்கூட, எல்லா உறுப்பினர்களுடைய கருத்தை அறிந்துதான் ஒத்திவைக்கின்றீர்கள்.

கடந்த 19 ஆம் தேதியன்று என்னுடைய மானியமான பொதுப் பணித் துறை விவாதிக்கப்பட்டு, நான் பதிலளிக்க வேண்டிய நிலையிருந்ததை அறிவீர்கள். எனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால், 12-00 மணிக்குள்ளாக மானியக் கோரிக்கையின்மீது கருத்துரைகள், பதிலுரைகள் இவற்றையெல்லாம் முடித்துவிட்டால் நன்றாக இருக்கும்; வசதியாக இருக்குமென்று நண்பர் செங்கோட்டையன் அவர்களிடம்தான் முறையிட்டேன். "கேள்வி நேரத்தை ஒத்திவைக்கலாம், அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு மானியக் கோரிக்கையை விவாதிக்கலாம்; நானும் பதில் சொல்ல ஏதுவாக இருக்கும்" என்று சொன்னேன். "நான் ஒருவன் எதிர்த்தால்கூட, கேள்வி நேரத்தை மாற்றியமைக்க முடியாது; எல்லோருடைய ஆதரவு இருந்தாலும், நான் அதற்குச் சம்மதிக்க முடியாது" என்று அவர் சொன்னார். இருக்கின்ற சட்டத்தை மீறக் கூடாது என்று நானும் அதற்கு ஒப்புக் கொண்டு, அன்றைக்கு ஒன்றரை மணி வரையிலே பொதுப் பணித் துறை மானியத்திலே விவாதித்து, பதிலும் அளித்திருக்கின்றேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், தாராளம், பெருந்தன்மை இவையெல்லாம் ஒரு வழிப் பாதையாகத்தான் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைக்கு விதிக்கு மாறாக, ஒரு பத்து நிமிடம் தாமதமாகக் கொடுத்தாலும், சேலம் உருக்காலைப் பிரச்சினையை நாங்கள் பேசித்தான் தீருவோம் என்று சொல்கிறார்கள். நண்பர் செங்கோட்டையன் அவர்களும் அதற்கான வேண்டுகோளை

2010 ஏப்ரல் 28] [கலைஞர் மு. கருணாநிதி]

விடுக்கின்றார். "பெருந்தன்மை" திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குச் சொந்தம் என்பதால், (மேசையைத் தட்டும் ஒலி) விட்டுத் தரலாம். தயவுசெய்து நீங்கள் அவர்களைப் பேச அழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அ.இ.அ.தி.மு.க. சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

முற்பகல் 11-05

திரு. ஆர். சின்னசாமி: சுருக்கமாகச் சொல்கிறேன் சார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்கு ஆலைக்கு 4,500 ஏக்கர் நிலத்தினை 38 ஆண்டுகளுக்கு முன்னால் கொடுத்திருக்கிறார்கள். அங்கிருந்த 3,000 குடும்பங்கள் குறைந்த விலைக்கு அந்த நிலத்தை சேலம் உருக்கு ஆலைக்கு வழங்கியிருக்கிறார்கள். நிலம் வழங்கிய அந்தக் குடும்பங்களின் வாரிசுகளுக்கான வேலையினை 140 பேருக்குத்தான் அந்த நிறுவனம் வழங்கியுள்ளது. மீதம் உள்ள 2,860 குடும்பங்களுக்கு வாரிசுகளுக்கான வேலையை அந்த நிறுவனம் வழங்காமல் இருக்கின்றது. 38 ஆண்டுக் காலமாக இவ்வளவு பேருக்கும் என்ன காரணத்தினால் வேலை கொடுக்கவில்லை என்பதை அறிந்து, மத்திய அரசை, மாநில அரசு வலியுறுத்தி அந்தக் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பைத் தர வேண்டும்; அல்லது குறைந்த விலையிலே அவர்கள் கொடுத்த அந்த நிலங்களை அவர்களுக்கே திருப்பித்தர வேண்டும் என்று அ.தி.மு.க. சார்பாக வலியுறுத்தி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதிலுரை.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Steel Authority of India நிறுவனத்திற்கு மற்ற மாநிலங்களில் நிலம் கொடுத்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலே பணி வழங்கியதைப்போல, சேலம் இரும்பு ஆலைக்கு நிலம் கொடுத்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பணி வழங்க வேண்டும் என்பது குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சின்னசாமி, திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. ஜிகே. மணி, திரு. வை. சிவபுண்ணியம், செல்வி கே. பாலபாரதி, திரு. து. ரவிக்குமார் ஆகியோர் அரசினுடைய கவனத்தை